# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2049 • ஜூன் 16, 2018 Weekly E-paper • June 16, 2018


## எடப்பாடியும் 18 எம்எல்ஏ க்களும்

• சுப.வீரபாண்டியன்

கடந்த ஆண்டு ஆளும் கட்சியைச் சேர்ந்த தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் 19 பேர், ஆளுநரைச் சந்தித்து, முதலமைச்சரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தனர். அப்படிக் கோரிக்கை வைத்ததே தவறு என்று கூறி, அவர்கள் அனைவரையும் சபாநாயகர் தகுதி நீக்கம் செய்தார். அவர்களுள் ஒருவர் (ஜக்கையன்) வருத்தம் தெரிவித்தவுடன், அவர் புனிதமாகி விட்டார் என்று கூறி, அவர் மீதான நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டது.



முதலமைச்சரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை, அரசுக்கு எதிரானது என்று கூறித் தகுதி நீக்கம் செய்த சபாநாயகர், ஆட்சிக்கு எதிராகவே வாக்களித்த ஓ.பன்னீர்செல்வம் உள்பட 11 பேர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, அவர்களில் ஒருவருக்குத் துணை முதல்வர் பதவியும், இன்னொருவருக்கு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

தப்பிப் பிழைத்த ஜக்கையன் தவிர மற்ற 18 பேரும் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் நீதிமன்றம் சென்றனர். விசாரணை முடிந்து, கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் தேதி, தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டது.

ஏறத்தாழ 5 மாதங்களுக்குப் பிறகு, சில நாள்களுக்கு முன் தீர்ப்பு வழங்கப்பட்டது. 'முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை, பின்னால் பார்த்தால் ராவுத்தர் குதிரை' என்பார்களே, அப்படி ஒரு தீர்ப்பு.




இரண்டு நீதிபதிகளும், ஆளுக்கொரு தீர்ப்பு சொல்லியுள்ளனர். சபாநாயகருக்கு உள்நோக்கம் எதுவும் இல்லை என்கிறார் ஒரு நீதிபதி. அவருக்கு உள்நோக்கம் இருக்கிறது என்கிறார் இன்னொரு நீதிபதி.

இப்போது மூன்றாவது நீதிபதிக்கு வழக்கு மாற்றப்பட உள்ளது. அதன்பிறகு உச்ச நீதிமன்றம் செல்வார்கள். ஆக மொத்தம், வழக்கு இப்போதைக்கு முடியாது. போதுமான ஆதரவு இல்லாதபோதும், எடப்பாடி முதல்வராகத் தொடர்வார். 18 தொகுதிகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்க மாட்டார்கள்.

2019 ஜனவரியில் காட்சிகள் சட சடவென மாறும். எடப்பாடி ஆட்சிக்கு ஒரு முடிவு வரும். 2019 ஏப்ரல் மாதம், சட்டமன்றம், நாடாளுமன்றம் இரண்டுக்கும் சேர்த்து ஒன்றாகத் தேர்தல் வரும்.

கதைச் சுருக்கம் இவ்வளவுதான். இடையில் பல காட்சிகள் வரும். இப்போது ஒரு நீதிமன்றக் காட்சி வந்து போயிருக்கிறது. ●

## அறிவிக்கப்படாத கூட்டணி!

அதிமுகவோ, திமுகவோ மறுபடியும் மக்களை ஏமாற்றி நாற்காலியில் அமர்ந்துவிடக் கூடாது என்பது என் கவலை.



**தமிழருவி மணியன்,**
புதிய தலைமுறை
தொலைக்காட்சியில்

திராவிடக் கட்சிகளை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், ரஜினி மட்டுமில்லை, யார் களமிறங்கினாலும், அவர்கள் கேட்காமலே ஆதரவு கொடுக்க நாங்கள் தயார்

**இல. கணேசன்,**
நியூஸ் 18
தொலைக்காட்சியில்



*இரண்டு கட்சிகளையும் சேர்த்துச் சேர்த்துச் சொன்னாலும், திமுக மட்டுமே இவர்கள் எல்லோருக்கும் குறி! பாஜக, மணியன், ரஜினி அனைவரும் ஒரே நேர்க்கோட்டில் நிற்கிறார்கள்.*

# பசுமைவழிச்சாலையா? பாலைவனச்சாலையா?

■ மா.உதயகுமார்

மத்திய அரசின் பாரத்மாலா பிரயோஜனா திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், சென்னை சேலம் இடையே பசுமை வழிச்சாலைத் திட்டம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத்திட்டம் 277.3 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செயல்படுத்தப்படத் திட்டமிடப்பட்டு உள்ளது. இதில் கிட்டத்தட்ட 250 கி.மீ. வனப்பகுதியில் அமையும் படி உருவாக்கப்பட இருக்கிறது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிணறுகள், 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டு, ஏரிகள், கண்மாய்களை ஆக்கிரமித்து இந்தச்சாலை அமைக்கப்படுகிறது. விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவதை எதிர்த்து விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் மீண்டும் ஒரு தூத்துக்குடி போன்ற நிகழ்வைச் சந்திக்க நேரிடும் என்று எதிர்க்கட்சியான தி.மு.கழகம் எச்சரிக்கை மணி அடித்திருக்கிறது. இந்நிலையில் சட்டப்பேரவையில் சென்னை–சேலம் பசுமை வழி விரைவுச் சாலை திட்டம் மற்றும் திட்டத்திற்கான எதிர்ப்பு குறித்து முதல்வர் எடப்பாடி பழனிசாமி விளக்கம் அளித்தார். இத்திட்டத்தினால் பாதிப்புகள் மிகவும் குறைவாகவும், பயன்கள் அதிகமாகவும் இருப்பதால், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவது அவசியம் என, முதல்வர் தெரிவித்தார். ஆனால் இதனால் யாருக்குப்




பயன், பொது மக்களுக்கா அல்லது பெரு முதலாளிகளுக்கா, என்று அவர் சொல்லவில்லை.

10 ஆயிரம் கோடிக்குச் சாலை என்று சொல்லும் போதே இதில் எவ்வளவு பணம் சூறையாடப்படப்போகிறது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. இதனால் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கப் போகும் மக்கள், பசுமையை இழக்கப் போகும் காடுகள் இவைபற்றி இவர்களுக்கு என்ன அக்கறை? பெருமுதலாளிகள் இலாபம் அடைய வேண்டும். அந்த இலாபத்தில் 'கமிஷன்' பெற்றால்போதும் என்கிற அளவில் இயங்குகிறவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை. தெருக்களிலும், மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் சாலைகளிலும் அத்தனைக் குறைபாடுகள் இருக்கின்றன. பல இடங்களில் சாலைகளே இல்லை. இதையெல்லாம் சரிசெய்தால் மக்களுக்குப் பயன் கிடைக்கும், இவர்களுக்கு என்ன பயன் கிடைக்கும்? அதனால், பயன் தரும் பணம் கொழிக்கும் திட்டங்களை அல்லவா அவர்கள் விரைந்து செயல்படுத்துவார்கள். காவிரி உரிமை, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை, நீட் எதிர்ப்பு என மக்கள் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் ஓர் அரசால் ஈரம் காய்வதற்கு முன் இப்படி ஒரு மக்கள் விரோதத் திட்டத்தைத் தொடங்க முடிகிறதென்றால், அவர்கள் பின்புலத்தில் இருக்கும் பார்ப்பனிய முதலாளித்துவத்தின் கோர முகம் என்ன என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

"நவீன அரசமைப்பில் "நிர்வாகம்" என்பது முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பேணிக் காக்கும் கமிட்டியாகவே இருக்கும்" என்று மார்க்ஸ் சொன்னது இங்கு பொருந்துவதை நாம் காணலாம். மேலும், மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் சொல்லியிருக்கும் "பாதுகாப்புத் தாழ்வாரம்" (defence corridor) அமைக்கப்படுவதற்கும் இந்த 8 வழிச்சாலை பெரிதும் பயனாகவும், பின்னர் தூணாகவும் அமையும். இந்திய இராணுவத்தைத் தமிழ்நாட்டில் குவிப்பது இதன் முதன்மையான நோக்கம். முதலாளித்துவமும் இராணுவமும் இணைந்தால் எப்படி இருக்கும் என்பதை நாம் கற்பனைச் கூட செய்ய முடியாது. மக்கள் போராட்டம் மட்டுமே நமக்கு இருக்கும் நம்பிக்கை. இந்த ஆட்சியாளர்கள் அகற்றப்படும் நாளே தமிழ்நாட்டிற்குப் பொன்னாளாகும். ●

ஆரியத்தால் வீழ்ந்தோம் ! திராவிடத்தால் எழுந்தோம் !! தமிழியத்தால் வெல்வோம் !!!

அம்பேத்கரின் பார்வையில் திராவிடம்





தெருமுனை கூட்டம்

நாள் : 22.06.2018 வெள்ளி
மாலை 6.00 மணி
இடம் :
பல்லவபுரம் பேருந்து நிறுத்தம் அருகில்
அம்பேத்கர் சிலை பின்புறம்

மாலை 5.00 மணிக்கு
பேரவையின் கொடியேற்றுபவர்
ஆ.சிங்கராயர்
து.பொ.செயலாளர், தி.இ.த.பே.

தலைமை
ச.ஜெஃப்ரி

வரவேற்புரை
இர.சரவணன்

முன்னிலை
மு.மாறன் மு.குமரன் துரை.செந்தாமரை கண்ணன்
செ.நித்யா நா.ஸ்ரீவித்யா உ.ஜனனி தி.சபானா
இரா.இளங்கோ கோ.மேனக்சா சீ.மோகனசுந்தரம்
து.சாந்தசீலன் மு.வளசை கணேசன்
அம்பத்தூர் ஆ.ராஜ் இரா.சக்தி மா.நிலவினியன் ஏ.அன்பு

எழுச்சியுரை
திராவிட அரக்கன்
எழுத்தாளர் வே.மதிமாறன்


கருத்துரை
மு.தமிழ்மறவன் பி.மகாலட்சுமி செ.தமிழ் சாக்ரடீஸ்
ப.எட்வின் இ.இளமாறன் க.சூர்யா

நன்றியுரை
செ.விக்னேஷ் [எ] இராவணன்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை, காஞ்சி மாவட்டம், பல்லாவரம் நகரம்

தொடர்புக்கு : 9789880173 / 9841327035







திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தென்மண்டலச் செயல்முறை விளக்கக்கூட்டம்

நாள் : 23.06.2018, சனிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : R.P.D அலுவலகம்,
அபர்ணா டவர், பைபாஸ் சாலை, மதுரை – 16.
தலைமை : ஆ.சிங்கராயர்
பேரவைத் துணைப் பொதுச்செயலாளர்
முன்னிலை : சிற்பி.செல்வராசு
பேரவைத் துணைப் பொதுச்செயலாளர்,
ப.புலேந்திரன்
அமைப்புச் செயலாளர்,
பி.மகாலட்சுமி
மாநில மகளிரணி அமைப்பாளர்,
இரா.செயபால் சண்முகம்
மதுரை மாவட்டத் தலைவர்
வரவேற்பு : அமர்நாத்,
மதுரை மாவட்டச் செயலாளர்
பொருள் : திராவிடம் 2.0 பேரவை வளர்ச்சி
தென் மாவட்டப் பொறுப்பாளர்கள்
தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

இவண்
மூ.செயம்பெருமாள்
தென் மண்டல அமைப்பாளர்




## அற்ப புத்தி !

மத்திய அரசு கீழடியை மூடி மறைத்தது. ஆனால் உண்மையை மூடி மறைக்க முடியவில்லை. திராவிட நாகரிகத்தின் தொன்மையும் சிறப்பும் உலகெங்கும் இப்போது பேசப்படுகிறது. இது பொறுக்காத மத்திய அரசு, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிக்கு(ஜூன் 29 முதல் ஜூலை 1 வரை) தொல்லியல் ஆய்வாளரான தமிழர் அமர்நாத் இராமகிருஷ்ணனை அனுப்ப மறுத்திருக்கிறது. மறுப்புக்கான காரணமும் தெரிவிக்கப்படவில்லை. பொய்களையே பரப்புரை செய்பவர்களால் உண்மையை மறுப்பதற்கு எப்படிக் காரணம் சொல்ல முடியும்? அவர்கள் பொய்களை மட்டுமே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## சென்னைக் கருத்தரங்கம்



**சென்னை** மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக 09.06.2018 அன்று சென்னை இக்சா மையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மாவட்டச் செயலாளர் வளசை கணேசன் தலைமையில் தோழர் கார்த்தி வரவேற்புரையாற்றினார். பேரவைத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.சிங்கராயர், தி.மு.கவின் கான்ஸ்டன்டைன் ரவிந்திரன், கொள்கைப் பரப்புச் செயலாளர் தமிழ்மறவன், மகளிர் அணிச் செயலாளர் மகாலட்சுமி, வடக்கு மண்டலச் செயலாளர் குமரன், காஞ்சி மாவட்டச் செயலாளர் இளமாறன், திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் சூரியா ஆகியோரின் கருத்துரைக்குப் பின்னர் 'கலைஞரின் ஆட்சியும், தமிழக வளர்ச்சியும்'என்ற தலைப்பில் மருத்துவர் நா.எழிலன் சிறப்புரையாற்றினார். சாந்தசீலன் நன்றியுரையுடன் நிறைவடைந்தது.

## திருப்பூர் பயிலரங்கம்



**திராவிட** இயக்கத் தமிழர் பேரவை சார்பாக திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் 10.06.2018 அன்று நடைபெற்ற திராவிட இயக்க வரலாற்றுப் பயிரலங்கத்துக்குத் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராசு தலைமை ஏற்க, மாவட்டச் செயலாளர் பிரகாசு வரவேற்புரையாற்றினார். துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர், மேற்கு மண்டலச் செயலாளர் இளங்கோவன் ஆகியோரின் கருத்துரைக்குப் பின்னர் பேரவை அவைத் துணைத் தலைவர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன் பயிலரங்கச் சொற்பொழிவு ஆற்றினார்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வெந்த புண்ணில் வேல்!

வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும் என்பது பழைய பாடல்.

இன்று வரப்பும் உயரவில்லை, நீரும் உயரவில்லை, நெல்லும் உயரவில்லை, குடியும் உயரவில்லை.

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவைச் சாகுபடிக்காக கடந்த 12ம் தேதி நீர் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விட்டிருக்க வேண்டும்.

ஆனால் திறந்துவிடவில்லை.

தமிழக முதல்வர் எடப்பாடி சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறார் நீர் திறந்து விடமுடியாது என்று.

அவர் சொன்ன காரணம் அணையில் நீர் இல்லை என்பது.

விவசாயிகளும், தமிழகத் தலைவர்களும், இருக்கும் நீரையாவது திறந்து விட்டுக் குறுவைச் சாகுபடியைக் காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தும் அரசின் காதுகளுக்குக் கேட்கவில்லை.

உச்சநீதிமன்ற ஆணையின்படி மத்திய அரசு காவிரி ஆணையம் அமைத்தும் கூட, தமிழகம், கேரளம், புதுவை அரசுகள் ஆணையத்துக்குத் தம் பிரதிநிதிகளை நியமித்த பின்னரும்கூட கர்நாடக அரசு இன்னமும் அதன் பிரதிநிதிகளை நியமிக்கவில்லை.

எனவே காவிரியில் தண்ணீர் வருவது தொடர்ந்து தடைபட்டு வருகிறது. இது ஒருபக்கம் இருந்தாலும், தமிழக அரசும் மேட்டூர் அணையின் தண்ணீரை உரிய காலத்தில் திறந்துவிடாமல் இருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக இருக்கிறது.

இப்படியே தொடர்ந்து கொண்டு இருந்தால் நாடு சுடுகாடாக மாறவேண்டிய நிலை ஏற்படும்.

இந்தியாவிற்குள் ஒரு சோமாலியாவா?

அரசு மக்களுக்காக இருக்கிறது. அரசுக்காக மக்கள் இருக்கமாட்டார்கள். இதை மத்திய, மாநில அரசுகள் உணரவேண்டும்.



# அரசியலமைப்பு – குப்பைத் தொட்டியில்....

**விஜய்**


பிராமணரல்லாதவர்களுக்காகவே தாங்கள் பாடுபடுவதாக வேஷமும் போட்டு, சமயம் வருகிற காலத்தில் இம்மாதிரி மோசம் செய்வதும் அதற்கு ஏற்ற மாதிரி ஒரு கட்சியை அமைத்துக்கொண்டு பொது நன்மைக்கு என்று சொல்லிக் கொண்டிருந்தால் எத்தனை காலத்திற்கு ஜனங்கள் ஏமாறுவார்கள்.

– தந்தை பெரியார், குடிஅரசு, 05.07.1925

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் புனித நூல் என்று மக்களவையில் வாய்கிழியப் பேசிய மோடி அரசு (தி இந்து ஆங்கிலம், 28.11.2015) இன்று அரசியலமைப்புச் சட்டத்தைக் குப்பைத் தொட்டியில் போடும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறது. 'சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்று' என்பது பாஜகவின் முக்கிய கொள்கைகளுள் ஒன்று.

அண்மையில், நடுவண் அரசின் பத்து அமைச்சகங்களில் இணைச் செயலாளர் தகுதியுள்ள பத்துப் பணியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்று விளம்பரம் செய்துள்ளது, மோடி அரசு. நடுவண் அரசின் பல்வேறு பதவிகளுக்கும், U.P.S.C. எனப்படும் மத்திய குடிமைப் பணிகள் தேர்வாணையம் பல படிநிலைகளில் தேர்வுகளை நடத்தி ஆட்களைத் தேர்வு செய்கிறது. இது ஓர் அரசியலமைப்புச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும். அரசியலமைப்பின் 308 முதல் 314 வரையிலான பிரிவுகள் குடிமைப்பணிகளுக்கான தேர்வு முறை விதிகளைப் பற்றிக் கூறுகின்றன.

நடுவண் அரசின் மேற்கண்ட அறிவிப்பின் மூலம், தனியாரை நேரடியாக அரசின் இணைச்



Government of India
Department of Personnel and Training

LATERAL RECRUITMENT TO SENIOR POSITIONS IN GOVERNMENT OF INDIA

The Government of India invites talented and motivated Indian nationals willing to contribute towards nation building to join the Government at the level of Joint Secretary.

Joint Secretaries are at a crucial level of senior management in the Government of India. They lead policy making as well as implementation of various programmes and schemes of the Department assigned to them. Joint Secretaries report to the Secretary/Additional Secretary in the Ministry/ Department.

I. Government is looking for ten (10) outstanding individuals with expertise in the areas of (i) Revenue (ii) Financial Services (iii) Economic Affairs (iv) Agriculture, Cooperation & Farmers' Welfare (v) Road Transport & Highways (vi) Shipping (vii) Environment, Forests and Climate Change (viii) New & Renewable Energy (ix) Civil Aviation and (x) Commerce.

II. Criteria:

(i) Age: Minimum of 40 years as on July 1, 2018.

(ii) Qualifications: Graduate from a recognized University/Institute. Higher qualifications would be an added advantage.

(iii) Eligibility: The following are eligible to apply:

a. Officers of any State/UT Government who are already working at equivalent level or are eligible for appointment to equivalent level in their cadre, with relevant experience.

b. Individuals working at comparable levels in Public, Sector Undertakings (PSUs), Autonomous Bodies, Statutory Organisations, Universities, Recognized Research Institutes with a minimum of 15 years experience.

c. Individuals working at comparable levels in Private Sector Companies, Consultancy Organisations, International/Multinational Organisations with a minimum of 15 years experience.

செயலாளர் பதவி அளவிற்கு நியமனம் செய்யப்படும் பேராபத்து எழுந்துள்ளது. இதன் மூலம் தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள, தனக்கு வேண்டியவர்களை அரசு நியமிக்கும். இது அரசியலமைப்புச் சட்டத்தையும், தன்னாட்சி பெற்ற மத்தியக் குடிமைப் பணிகள் தேர்வாணையத்தின் அதிகாரத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறது. இட ஒதுக்கீட்டை ஓரங்கட்டி, தனக்கு வேண்டிய ஆர். எஸ். எஸ். இந்துத்துவவாதிகளை அரசுப்பணிகளில் நியமித்து, அதன் மூலம் சமூக நீதியைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல் இஃதென்பது வெள்ளிடை மலை. கொள்கை முடிவுகளை எடுக்கும் அதிகாரமுள்ள முக்கிய பதவிகள் இவ்வாறு நிரப்பப்படும் போது, இந்தியாவின் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலையும் நிலைக்குத் தள்ளப்படும்.

ஏற்கெனவே, யூ. பி. எஸ். சி. தேர்வு முறையில் மாற்றங்களைக் கொண்டு வரத் திட்டம் நடைபெறும் வேளையில், இவ்வாறு ஓர் அறிவிப்பினைச் செய்திருப்பது, மோடி அரசு அரசியலமைப்புச் சட்டத்தைக் கிஞ்சித்தும் மதிப்பதில்லை என்பதையே காட்டுகிறது. ●

## போராட்டம்

கவிஞர் வெற்றிச்செல்வன்



கருப்பைத் தூக்கம்
கலைந்த நாள்முதல்

நெருப்புக் கூட்டில்
நெடும்பயணம் வரை

போராட்டமே மானுட நியதி
"போராடாதே"
– இது மனுவின் நீதி.

கற்பிக்கவும் போராடவும்
கற்றுக் கொடுத்த
பூமி இது.

நெருப்புச் சூரியன்
நெசவு செய்த
நாடு இது.

போராட்டம்
உரிமைகளின் அடிநாதம்!

கனவு நாயகர்களின்
கருத்தழிந்த கதையல்ல

கற்பனை வாசிகளின்
விற்பனைச் சரக்கல்ல

குருதியில்
எழுதப்படுவது வரலாறு!

குற்றேவல் புரிவோருக்கு
இது புரியாது! ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.